இங்கு கொடுக்கப்பட்டுள்ள ஜாதகம் பிஸ்லரி நிறுவனத்தின் தலைவர் ரமேஷ் சவுகானின் ஜாதகம் ஆகும்.




1984 வது ஆண்டு தொடங்கப்பட்ட இந்த நிறுவனம் மிக அசாத்தியமான வளர்ச்சியை அடைந்துள்ளது.

7500 கோடி சொத்து மதிப்புகள் உடைய நிறுவனம்

வருடத்திற்கு 100 கோடி லாபத்தை தரக்கூடிய நிறுவனம்.

இந்த நிறுவனம் தற்பொழுது விற்பனைக்கு வந்துள்ளது.

ஒரு நிறுவனத்தை உருவாக்குவதற்கு எவ்வளவு பெரிய சவால்களும் சிரமமும் நேர விரையமும் ஏற்படும் என்பது தொழில் தொடர்ந்து நடத்திக் கொண்டு வரும் தொழிலதிபர்களுக்கு மட்டுமே தெரிந்த ஒரு விஷயம்.

இங்கு நாம் பார்ப்பது மிகப்பெரிய தொழில் சாம்ராஜ்யத்தின் வாரிசாக தொழிலை நடத்த நபர் இல்லாததாலே அந்த தொழிலை விற்பனை செய்ய முன் வருகிறார் அந்த ஓனர்.

அவருக்கு ஒரே மகள் அவரின் மகள் ஆடை வடிவமைப்பாளராக இருந்து வருகிறார் வெளிநாட்டில் அவருக்கு அந்தத் தொழிலின் மீது தான் விருப்பம் இருப்பதாகவும் தந்தையின் தொழிலை பார்க்க விருப்பம் இல்லை என்று கூறியதால் வேறு வழி இல்லாமல் தொழிலை விற்பனை செய்ய முன் வருகிறார் பிஸ்லரி ஓனர்.

ஒருவரின் ஜாதகத்தை பார்த்து அவரின் வாரிசுகள் தன் தொழிலை நடத்துவார்களா என்று ஜோதிடத்தின் வாயிலாக பார்த்து கூற முடியும்.

எப்படி என்றால் பொதுவாக குழந்தைகள் குறிக்கக்கூடிய குரு தீய கிரக தொடர்புகள் இருக்கக் கூடாது. இப்படி இருந்தால் குழந்தைகள் தங்களைப் பின்பற்றி வாழ விரும்ப மாட்டார்கள். மற்றும் பெண்களாக இருக்கும் பட்சத்தில் சுக்கிரனையும் அடிப்படையாகக் கொண்டு பார்க்க வேண்டும் சுக்கிரனுக்கும் தீய தொடர்புகள் இருக்கும் பட்சத்தில் பெண்களும் தன் தந்தையின் தொழில்களை கவனிக்க வரமாட்டார்கள்.

கொடுக்கப்பட்டுள்ள ஜாதகத்தை பாருங்கள் அந்த ஜாதகத்தில் குழந்தையை குறிக்கக்கூடிய குருவுடன் சனி சேர்க்கை. பெண் குழந்தை குறிக்கக்கூடிய சுக்கிரனுக்கு சனியுடன் பார்வை இந்த இரண்டு கிரகத்திற்கும் சனியின் தொடர்பு இருப்பதால் இவருக்கு தன் தொழிலுக்கு வாரிசுகள் வர வாய்ப்பு இல்லை.

7500 கோடி சொத்து மதிப்புடைய வருடம் தோறும் 100 கோடி லாபத்தை ஈட்டக்கூடிய ஒரு நிறுவனத்தை புறக்கணிக்க சனி போன்ற வலிமையான கிரகத்தால் மட்டுமே சாத்தியம் ஆகும்.

அவன் இன்றி ஒன்று அசையாது என்று பொதுவாக கூறக்கூடிய வார்த்தைகளை இங்கு வெட்ட வெளிச்சமாக்குவது போன்று காட்டுகிறது.

Selvam astrologer Coimbatore

Call WhatsApp 9842780218